
# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
சித்திரை 24
ஜமா. அவ். 28
ஞாயிறு (7-5-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 95
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60


## தமிழ்த் தொழிலாளர்களின் மே நாள் விழா!



யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் இணைப்பு இயக்கங்களும் தமிழ் தொழிற்சங்கங்களும் கூட்டாக எடுத்த மேதின விழாவில் தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுவதையும்மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களில ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்,

படம்: எ.வி.எம்.

# சாகத் தயாராகுங்கள்!

# மீண்டும் வருகிறோம்!

## அனுராதபுரம் தமிழர்களுக்கு துட்டகைமுனு முன்னணி கடிதம்!

"WE ARE COMING AGAIN AND GET READY TO DIE— நாம் மீண்டும் வருகிறோம்; நீங்கள் சாகத்தயாராக இருங்கள்!"—இவ்வாறு கூறும் எச்சரிக்கைக் கடிதமொன்று அனுராதபுரத்திலுள்ள தமிழர்களுக்கு துட்டகைமுனு இயக்கம் என்று அழைக்கப்படும் (DUTU GAMUNU PRONT) ஓர் இயக்கத்திடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறான கடிதங்கள் அனுராதபுரத்தில் உள்ள தமிழ் வர்த்தகர்களுக்கும் ஏனைய தமிழர்களுக்கும் தட்டச்சில் பொறிக்கப்பட்டு தபாலில் கிடைத்துள்ளன. இக்கடிதங்களில் 27-4-78 திகதியிடப்பட்டுள்ளது.

இக்கடிதங்களைப் பெற்ற தமிழர்கள் அவற்றை அனுராதபுரம் அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்து பாதுகாப்பு கோரியுள்ளனர்.

அனுராதபுரத்தில் சன்சோனி ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்த நேரத்திலிருந்து, அங்கு பல இனவெறிச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

"சிங்களவர்களை சன்சோனிக்கு காட்டிக்கொடுக்காதே" என்று கூறும் மிரட்டல் சுலோகங்கள் அனுராதபுரத்தில் எழுதப்பட்டிருந்ததை சுதந்திரன் சென்ற வார இதழில் நாம் அம்பலப் படுத்தியிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

## அரசியலமைப்பு திருத்தத்தில் தாய்மொழி கல்விக்கும் உத்தரவாதம் கிடையாது?

தமிழ்ப் பிள்ளைகளுக்கு அவர்களின் தாய்மொழியே கட்டாய போதனு மொழியாக இருக்கும் என்பதற்கு அரசியலமைப்புக்கு கொண்டு வரப்படும் திருத்தங்களில் எந்த விதமான உத்தரவாதமும் அளிக்கப்படமாட்டாது என்று தெரியவருகிறது.

அத்துடன் நாட்டின் உத்தியோக மொழிகளில் ஒன்றாக தமிழ் அங்கீகரிக்கப்படமாட்டாது.

சிங்களம் மாத்திரமே நாட்டின் ஒரே ஆட்சிமொழியாக தொடர்ந்து இருக்கும் அதே சமயத்தில் சிங்களத்துடன் தமிழும் நாட்டின் தேசிய மொழிகளில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்படுமாம்.

அதே சமயத்தில், தேசிய மொழிகளான சிங்களம் அல்லது தமிழை ஒவ்வொரு பிள்ளையும் தனது கல்வி மொழியாகத் தேர்ந்தெடுக்கலாம் என்றும் அரசியல் சட்டத்திருத்தம் கூறுகிறதாம்.

அதாவது ஒரு பிள்ளையின் தாய் மொழிதான் அதன் கட்டாய போதனு மொழி என்பதற்கு சட்ட உத்தரவாதம் அளிக்கப்படமாட்டாது. ஒரு தமிழ்ப்பிள்ளை

—8-ம் பக்கம் பார்க்க

## தங்கத்துரைக்கு தொடர்ந்து விளக்கமறியல்!

மூதூர் முன்னுள் பா.உ.வும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளம் தலைவர்களிலொருவருமான திரு. அ. தங்கத்துரை அவர்கள் பொலிசாரால் இரண்டாவது முறை கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

திரு. தங்கத்துரையை பிணையில்செல்ல அனுமதிக்குமாறுகோரி சட்டத்தரணிகளான திரு. இரா. சம்பந்தன் பா. உ., சிவா. இராசரெத்தினம் ஆகியோர் நீதிமன்றத்தில் நான்கு மணி நேரமாகவாதாடியும் திரு. தங்கத்துரைக்கு பிணை வழங்கப்படவில்லை,

கிளிவெட்டியில் அப்புகாமி தம்பதிகள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட திரு, தங்கத்துரையை முதலில் விடுதலை செய்த பொலிசார் பின்னர் இரண்டாவது தடவையாக

—8-ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத் தேசிய இனத்தின் விடுதலைக் குரல்




செல்வன், மா. இளம்பிறை மான்,
அச்சுவேலி வடக்கு.

கே: தற்காலத் தமிழ்த் திரைப்படங்களில் தமிழர் பண்பாடு எப்படி இருக்கிறது?

ப: தமிழ்த் திரைப்படங்களில் தமிழர் பண்பாடா? அப்படி ஏதாவது அவற்றில் இருந்தாலல்லவா அபிப்பிராயம் கூறுவதற்கு?

கே: 1947ல் சுதந்திரன் ஆரம்பிக்கப்பட்டபோது, அது தினசரிப்பத்திரிகையாக வெளிவந்தது உண்மையா?

ப: ஆம், நூற்றுக்கு நூறு உண்மை; அப்போது நீங்கள் பிறந்துகூட இருக்கமாட்டீர்கள் இல்லையா?

ஃ

நாக. சண்முகராசா,
464, தமிழகம்,
மல்லாவி.

கே: எமது தொகுதி பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்களைப்பற்றி ஏதாவது கூறுங்கள் குயுக்தியாரே?

ப: புள்ளிவிபரங்களை குறிப்பேதுமின்றி நினைவில் வைத்திருந்து அள்ளிவீசுவதில் ஒரு புலி, திரு. செல்லத்தம்பு. அவர் பல ஆண்டுகளுக்கு முன்பு அருமையான ஓர் ஆலோசனையை முதலில் தமிழரசுக்கட்சிக்கும் பின்னர் கூட்டணிக்கும் சமர்ப்பித்திருந்தார் — அதாவது ஒவ்வொரு கூட்டணி பா. உ. வுக்கும் ஒவ்வொரு கோவை (FILE) திறக்கப்படவேண்டுமென்றும், (1) தொகுதிக்கு ஆற்றிய சேவை, (2) கட்சிக்கு ஆற்றிய சேவை (3) பாராளுமன்றத்தில் ஆற்றிய சேவை — ஆகிய மூன்று விஷயங்களைப் பற்றி ஒவ்வொரு பா. உ. வும் மாதா மாதம் தலைமைப் பீடத்துக்கு தவறாது அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மேற்படி அறிக்கை அவரவர் கோவையில் இடம் பெற வேண்டுமென்றும் வேட்பாளர் நியமனம் வழங்கும்போது அக் கோவையை நுணுக்கமாகப் பரிசீலித்தே நியமனம் வழங்கவேண்டுமென்றும் வற்புறுத்தி வந்தார்; அந்த ஆலோசனை ஏற்கப்பட்டிருப்பின் கூட்டணியில் களைபிடுங்கப்பட்டிருக்கும்.

ஃ

எஸ். ரவீந்திரன்,
கொழும்பு-3

கே: தந்தை செல்வாவை நினைக்கும் அளவுக்கு தம்பி சிவகுமாரனை மறந்தது ஏன்?

ப: யார் மறந்தார்கள்? தந்தை செல்வா உருவாக்கிய அரசியல் குடும்பத்தின் கடைக்குட்டி தம்பிசிவகுமாரன்; அவன் காட்டிய வழியில் தமிழ் இளைஞர்கள் வீரநடை போடுகிறார்களே-இது சிவகுமாரனை மறந்தது ஆகுமா?

ஃ

ஆர். கே. பிள்ளை,
சித்தன்கேணி,

கே: செல்வாவின் பார்வை நம்மீது — மக்கள் பார்வை யார் மீது?

ப: தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களின் மீது!

கே: சுதந்திரன் பத்திரிகையில் தந்தையின் படத்தை தலைப்புடன் வாரா வாரம் ஏன் அச்சிடுகிறீர்கள்?

ப: பெரியவர் செல்வா சுதந்திரனின் தந்தை என்பதாலும், தந்தை செல்வாவின் நிழலாகவும் நினைவாகவும் சுதந்திரன் வெளிவருவதாலும்!

கே: இலங்கைக்கும் இந்தியாவுக்குமுள்ள மொழிக் கொள்கையில் வித்தியாசம் என்ன?

ப: அங்கு தமிழ் நாட்டில் தமிழே அரசுமொழியாக கோலோச்சுகிறது; இங்கு தமிழ் ஈழத்தில் சிங்களமே கோலோச்சுகிறது!

ஃ

வே. பரசுராமன்.
துறைநீலாவணை-8

கே: தந்தை செல்வாவின் நினைவு தினத்தையொட்டி தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் செய்தி ஏதும் அனுப்பியதாகத் தெரியவில்லையே! காரணம் என்னவாயிருக்கலாம்?

ப: பகலில் ஆட்சிப் பொறுப்பு, இரவில் நடிப்பு வேலை இப்படி பல தொல்லைகள் அவருக்கு!

ப. ஸ்ரீபதி,
நாடகாசிரியர்,
அரசடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

கே: சுயாட்சிக் கழகத் தலைவரைப்பற்றி இரு கேள்விகள் கேட்டிருந்தேன். பதில் கொடுக்கவில்லையே என் மீதா அல்லது அவர் மீதா உங்களுக்குக் கோபம்?

ப: எனக்கு யார்மீதும் கோபம் கிடையாது. திரு. நவரத்தினம் எனது மரியாதைக்குரியவர்-ஆனால் அவர் கூட்டணியோடு இணையாமல் ஒதுங்கியிருப்பதுதான் எனக்கு மனவருத்தம்.

ஃ

க. அ. இலட்சுமி,
'சிவன் வாசம்'
நீர்வேலி.

கே: 16-4-78 சுதந்திரனில் "ஒவ்வொரு நாடுகளுக்கும் சென்று" என்ற தொடரும், 23-4-78 சுதந்திரனில் "ஒவ்வோர் சொற்களும்" என்ற தொடரும் வந்துள்ளன. இவை "ஒவ்வொரு நாட்டுக்கும் சென்று" என்றும், "ஒவ்வோர்சொல்லும்" என்றும் அமைய வேண்டுமல்லவா? உங்கள் இலக்கண விற்பன்னர் இதுபற்றி விளக்குவாரா?

ப: உங்களையே எமது 'இலக்கண விற்பன்னராக' நியமித்துள்ளேன்; நீங்களே விளக்கிவிட்டீர்களே!

ஃ

பொன். பூலோகசிங்கம்,
கொழும்பு வளாகம்.

கே: தமிழீழத்தில் தமக்கு காணி நிலமோ உற்றார் உறவினரோ இல்லாத ஒரே காரணத்திற்காக தமிழீழத்தை எதிர்க்கும் ஒரு சில கொழும்புத் தமிழர்களுக்கு நாம் கூறக்கூடிய தென்ன?

ப: அரசனை நம்பி புருஷனை கைவிடாது கொழும்பிலுள்ள சொத்துக்களை விற்று வது தமிழ்ஈழத்தில் தமக்கென காணி நிலத்தை இப்போதே அவர்கள் பெற்றுக் கொள்வது நல்லது; இன்றேல் பின்னர் அவர்கள் வருந்த வேண்டிய நிலையே ஏற்படும். யார் எதிர்த்தாலும் தமிழ்ஈழம் உருவாகப் போவது காலத்தின் கட்டாயம்!

ஃ

கே. கே. வி. நாதன்,
மிருசுவில், வடக்கு.

கே: கடல்வற்றி மீன்தின்னக் காத்திருக்கிறேமே கடல்தான் வற்றுமா? அல்லது எம் குடல்தான் வற்றுமா?

ப: இன்னும் ஒரு மாதத்துக்குள் எல்லாம் தெரிந்துவிடும்!

ஃ

அ. சகாயன்,
2ம் குறுக்குத்தெரு,
புத்தளம்.

கே: எம். ஜி. ஆர். இனி [illegible] நடிப்பது தவறு அல்லவா?

ப: எம். ஜி. ஆர். நடிப்பது தவறு அல்ல; ஆனால் தமிழக முதல்வர் நடிப்பது தான் தவறு என்கிறார்கள் ஒரு சாரார்!

ஃ

செல்வி ஜமுனா,
10ம் வகுப்பு,
யாழ் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தொழிற்சங்கம் இருக்கிறதா? அதன் தலைவர் யார்?

ப: தமிழர் விடுதலைக்கூட்டணியின் அரசியல் தலைமையை ஏற்ற தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி இருக்கிறது. இதன் தலைவராக திரு. சே. மா. செல்லத்தம்பு விளங்குகிறார்.

கே: கம்யூனிஸ்ட் கட்சி சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துள்ளதாமே!

ப: சுயநிர்ணய உரிமையை அவர்கள் ஏற்றதாகத் தெரியவில்லை; அவர்கள் ஏற்றிருப்பது. பிரதேச சுயாட்சியையே! சுயநிர்ணய உரிமை என்பதன் பொருள் சுதந்திர அரசு ஒன்றை அமைப்பதுதான் என்று கூறுகிறார் மாமேதை லெனின்.

ஃ

செல்வி, க. மனோரஞ்சி,
சித்தன்கேணி.

கே: முந்திய அரசில் எதிர்க்கட்சி தலைவராக இருந்தவர், இந்த அரசில் பிரதமராகி, பின் சனாதிபதியாகிவிட்டார். இந்த அரசில் எதிர்க்கட்சித்தலைவராக இருப்பவர் எப்போ பிரதமர் ஆவார்?

ப: தனிநாடு அமைத்த பின்பு பிரதமர் ஆவார். ஆனால் அதற்கு முன் அவர் இன்னும் எவ்வளவு பெரிய தியாகங்களை செய்ய நேரிடுமோ யார் கண்டார்கள்?

கே: திரு. அமிர்தலிங்கம், திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன இருவரைப்பற்றியும் கூறுங்கள்?

ப: ஜே. ஆர். ஜெயவர்த்தன சுதந்திரம் பெற்ற ஒரு நாட்டின் தலைவர்; திரு. அமிர்தலிங்கம் சுதந்திரம் பெற போராடும் ஒரு நாட்டின் தலைவர்!

ஃ

'தமிழீழ' யோகேஷ்,
'பொன்பதி'
உடுப்பிட்டி.

கே: தமிழ் ஈழம் காண்பது நமது கொள்கை. அதே போல இப்போது திருமலையைப் பிடிப்பதே சிங்களவரின் திட்டம்போல் தெரிகின்றதே! என்ன செய்யலாம்?

ப: செய்வது என்ன? யாழ்ப்பாணத்துக்குள் குவிந்துகிடக்கும் தமிழர்கள் திருகோணமலையில் சென்று குடியேற வேண்டியதுதான்! திருகோணமலையை இழந்த தமிழ் ஈழம் யாருக்கு வேண்டும்?

செல்வி. மஞ்சுவிழி,
சின்னத்துறை,
வல்வெட்டித்துறை.

கே: செந்தமிழர் இயக்கம் பற்றிய உங்கள் கருத்தென்ன?

ப: முப்பதாண்டுகளுக்கு முன் மூதறிஞர் தந்தை செல்வா, தலைவர் ஜீ. ஜீ., டாக்டர் நாகநாதன் போன்றோர் வற்புறுத்திய சுயநிர்ணய உரிமையைப் பற்றி இப்போதுதான் புதிதாக பேச ஆரம்பித்திருக்கும் ஒரு இயக்கம்!

கே: செந்தமிழர் இயக்க மகாநாட்டில் கூட்டணிப் பிரமுகர்கள் கலந்து கொண்டதன் நோக்கம் என்ன?

ப: சுயநிர்ணய உரிமை என்ற அளவில் நிற்பவர்களை சுதந்திர தமிழ் நாடு என்ற கொள்கைக்கு இழுப்பது தான்!

● கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,

## செல்வா, ஜீ.ஜீ பெயரால் கிளிநொச்சியில் அன்னதானம்!

தமிழ் ஈழத் தேசியத் தந்தை மூதறிஞர் அமரர் செல்வா, சட்ட மாமேதை அமரர் ஜீ.ஜீ. ஆகிய தமிழ்த் தலைவர்களின் பெயரால் கிளிநொச்சியில் 12.5 78 வெள்ளிக்கிழமையன்று அன்னதானம் ஒன்றையும் நினைவுக் கூட்டத்தையும் நடத்துவதற்கு கிளிநொச்சி மாவட்டத் தமிழர் விடுதலைக்கூட்டணிக் கிளை ஏற்பாடு செய்து வருகிறது. அன்னதாம் கிளிநொச்சி கந்தசாமி கோவிலில் நடைபெறும். இந்த அன்னதானத்துக்கு உதவி புரிய விரும்புவோர் தமது உதவிகளை 10-5-78க்கு முன்னர் கிளிநொச்சி கூட்டணி செயலகத்தில் ஒப்படைக்குமாறு மேற்படி கிளையினர் கோருகின்றனர்.

அன்று மாலை கிளிநொச்சி முற்றவெளியில் தலைவர்களின் நினைவாஞ்சலிக் கூட்டம் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்துக்கு கிளிநொச்சி பா.உ. திரு. வி. ஆனந்தசங்கரி தலைமை வகிப்பார். கூட்டத்தில் கூட்டணிப் பிரமுகர்கள், பா.உ.க்கள், உரையாற்றுவார்கள்.

இப்போது
விற்பனையாகிறது!
பாராளுமன்றத்தில் பெரியவர்
(தொடர்—1)
விலை ரூபா ஒன்று
கிடைக்குமிடம்:
சுதந்திரன் வெளியீட்டகம்,
194ஏ; பண்டாரநாயக வீதி,
கொழும்பு-12.

●

மூதறிஞர் தந்தை செல்வா நினைவாக
கோவைமகேசன்
எழுதிய
செல்வாஞ்சலி
விலை ரூபா ஒன்று
கிடைக்கும் இடம்:
கோவை மகேசன்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,
மற்றும்,
'அரசியல்மடல்'
(முதலாவது தொகுதி)
விலை ரூபா 5-00
நூலும் கிடைக்கும்.

●

சுதந்திரன் சந்தா
ஓராண்டுச் சந்தா ரூ. 50.00
அரை ஆண்டு ,, ரூ. 25,00
பணம் அனுப்பவேண்டிய முகவரி:-
"சுதந்திரன்"
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

●

மெழுகுவர்த்தி
அமரர் டாக்டர் நாகநாதனின் சரித்திரம்
சிலம்புச்செல்வர் ம.பொ.சி, மதிப்புரையுடன்
நூலாசிரியர்: கரிகாலன்
விலை: ரூபா 5-00
கிடைக்குமிடம்;-
சுதந்திரன் அலுவலகம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சில சிந்தனைகள்....

# சுயநிர்ணய உரிமையும் தனிநாடும்

**அன்பு நண்பா**

"சுயநிர்ணய உரிமை" என்ற முழக்கம் இன்று பல திசைகளிலுமிருந்து கேட்கிறது; பல்வேறு சக்திகள், பல்வேறு அர்த்தங்களுடன் பல்வேறு நினைவுகளை நெஞ்சில் தேக்கியபடி 'சுயநிர்ணய' கோஷத்தை எழுப்புகின்றன; 'சுயநிர்ணய உரிமை' என்ற தத்துவத்துக்கு வெவ்வேறு வியாக்கியனங்கள், விளக்கங்கள், தரப்பட்டு மக்களின் சிந்தனையை குழப்பி விடும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

"இலங்கையின் எல்லைத் தொடர்புகளை பாதிக்காத முறையில் ஒற்றையாட்சியின் கீழ் பிரதேச சுயாட்சி" இது தான் சுயநிர்ணய உரிமை;

என்று சிலரும்—

"பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை வெறும் ஏட்டுச் சுரக்காயாக சட்டத்தில் இருக்கவேண்டும்—ஆனால் பிரிந்து போகாமல் சேர்ந்து வாழ வேண்டும்"

என்று வேறு சிலரும்—

"சுயநிர்ணய உரிமை ஒரு தேசிய இனத்துக்கு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை; ஆனால் அதை உபயோகப்படுத்தி ஒரு இனம் பிரிந்து செல்வதை அனுமதிக்க முடியாது"

என்று இன்னும் சிலரும்—

தங்களை முற்போக்குவாதிகள்—விஞ்ஞான சோசலிசவாதிகள் என்றெல்லாம் அழைத்துக் கொள்ளும் கொம்யூனிஸ்டுகள் பல்வேறு அணிகளில் நின்று கொண்டு வெவ்வேறு விதமான வியாக்கியானங்களை மேலே சொன்னவிதமாக கூவிக்கொண்டு—விடுதலை உணர்ச்சியால் ஒன்றுபட்டுள்ள தமிழ் மக்களின் கண்களில் மண்ணைத்தூவிடும் முயற்சியிலே அண்மைக்காலமாக ஈடுபட்டிருப்பதைப் பார்க்கிறோம்,

நண்பா. நாம் தமிழரசுக் கட்சியினராக இருந்த போதும், தமிழர் விடுதலைக்கூட்டணியாக மாறிய பின்பும்—தமிழ்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முன்வைத்து கடந்த முப்பதாண்டுகளாக போராடி வந்த வேளையில்—நம்மைப்பார்த்து இனவெறியர்கள், பிற்போக்குவாதிகள், தேசத் துரோகிகள், வகுப்புவாதிகள்; என்றெல்லாம் வைது தீர்த்தவர்கள், இன்று தாமே — அவர்களது உள்நோக்கம் எதுவாக இருந்திட்ட போதிலும்—சுயநிர்ணய உரிமை முழக்கத்தை புதிய சுருதியில் ஓங்கி ஒலித்து. ஏதோ தமிழ் மக்களுக்கு தாம் புதிய வழியைக் காட்டுவதாக பாசாங்கு செய்கின்றனர்!

சுயநிர்ணய உரிமை முழக்கம் தமிழ் ஈழத்தின் அரசியலுக்கு ஒன்றும் புதியது அல்ல; 1947ம் ஆண்டு—தமிழ் இனத்தின் ஒரே இயக்கமாக தமிழ் காங்கிரஸ் விளங்கிய நேரத்தில்—தந்தை செல்வாவும் தலைவர் பொன்னுவும் ஒரே இயக்கத்தினராக கைகோத்துப் பணியாற்றிய வேளையில்—"சோல்பரி ஒற்றையாட்சி அரசியலமைப்பை ஈழத்தமிழினம் நிராகரித்து விட்டது; என்று அது சுயநிர்ணய உரிமைகோருகிறது" பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு இங்கிருந்து தமிழ் காங்கிரஸ் சார்பில் அன்று ஒரு தந்தி அனுப்பியவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் தாம்!

1949ம் ஆண்டு தமிழரசுக் கட்சியை உருவாக்கிய வேளையில்—சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் தேசிய இனத்துக்கு விடுதலை வேண்டும் என்று முழக்கமிட்டு, அந்தக் கொள்கையின் அடிப்படையில் தமிழரசுக் கட்சியை நிறுவியவர் தமிழீழத் தந்தை செல்வா! முப்பதாண்டுகளாக சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற வரும் தந்தை செல்வா அவர்களே!

அதுமட்டுமன்றி தமிழ் மக்கள் ஒரு நாட்டினம் (Nation) என்பதையும். அரசியல் விஞ்ஞானப்படி எத்தகைய சோதனையை நடத்திப் பார்த்தாலும், தமிழ் மக்கள் ஒரு தனிநாட்டினம் தான் என்பதையும் 30 ஆண்டுகளுக்கு முன்பே பின்வருமாறு வலியுறுத்தியிருந்தவர் அமரர் டாக்டர் நாகநாதன்.

"...The Soulbury — Senanayake — Jennings constitution is the greatest enemy of the Tamil Nation in Ceylon... A nation is defined as a people who had firstly a virile, advanced language and culture, of their own. Secondly a distinct history of their own and thirdiy occupied a separate teritory of their own. By every scientific test of Nationhood known to political science, the Tamiis and Sinhalese constituted two distinct Nations" —ஆதாரம்: 'மெழுகுவர்த்தி'

ஆக, 'சுயநிர்ணய உரிமை' என்பதும். தமிழ்மக்கள் ஒருதனித்தேசிய இனம் என்பதும் இன்று ஏதோ திடீரென கண்டுபிடிக்கப்பட்ட 'புதிய சிந்தனைகள்' அல்ல என்பதையும், முப்பதாண்டுகளாக நம்மை வழிநடத்தி வரும் தலைவர்களும் இயக்கமும், முன்வைத்து வந்திருக்கும் அரசியல் தத்துவங்கள் தாம் அவை என்பதையும் எடுத்துக் காட்டிடவே இதைக் குறிப்பிட்டேன்!

இந்த சுயநிர்ணய உரிமையை நாம் எப்படிப்பயன் படுத்தப்போகிறோம் என்பதிலேயே நாம் இன்று முன்பிருந்து வேறுபட்ட ஒரு நிலையை திட்டவட்டமாக பிரகடனப்படுத்தியிருக்கிறோமே தவிர சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை ஒன்றும் புதுமையானதல்ல நமக்கு! இன்றைக்கு ஒரு சிலருக்கு அது ஏதோ புதுமையாக — கவர்ச்சிக் கோஷமாக தோன்றினாலும் கூட — இந்த இயக்கத்துக்குள் வளர்ந்து வந்திருப்பவர்களுக்கு இதிலே புதுமையொன்றும் கிடையாது.

1972ம் ஆண்டு புதிய சிங்கள ஏகாதிபத்திய அரசியலமைப்பு திணிக்கப்படுவதற்கு முன்பு—நமது சுயநிர்ணய உரிமையை பயன்படுத்தி—இணைப்பு ஆட்சியின் கீழ் வாழ விரும்பும் நமது நல்ல எண்ணத்தை ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகாலமாக வெளியிட்டு வந்திருக்கிறோம்; ஆறு பொதுத்தேர்தல்களில் இதே கொள்கையையே நமது இயக்கம் முன்வைத்து வந்திருக்கிறது; ஆனால் 1972ம் ஆண்டு ஒற்றையாட்சி சிங்கள சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்கும் புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்ட பின்னர், சுயநிர்ணய உரிமையை நாம் எப்படி பயன்படுத்துவது என்று அதுவரை எண்ணியிருந்தோமோ அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு விட்டோம்!

ஆம் நண்பா, சிங்களவர்களுடன் இணைந்து வாழும் திட்டம் முற்றாக, முடிவாக வட்டுக்கோட்டை மாநாட்டின்போது கைவிடப்பட்டு, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சுதந்திர தமிழ் ஈழ அரசை நிறுவி தனியே பிரிந்து வாழுவது என்று தீர்க்கமாக முடிவுசெய்துவிட்டோம்! மாற்ற முடியாத இறுதித் தீர்மானமாக இத் தீர்மானம் எடுக்கப்பட்டுவிட்டது!

தமிழ் தேசிய இனத்திற்குரிய ஒரே வழி—மாற்ற முடியாத வழி—தனிநாடுதான் என்பதை 1977 ஆடிப் பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் மிகவும் தீர்க்கமாகவும் திட்டவட்டமாகவும் அறிவித்துவிட்டார்கள்! தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு கிடைத்த அபரிமிதமான வெற்றி 'தனிநாடு' என்னும் சுதந்திர இலட்சியத்துக்கு மட்டுமே கிடைத்த மக்களின் அங்கீகாரம் என்பதை யாரும் மறுத்திட முடியாது!

சுயநிர்ணய உரிமை கிடைத்தால் அதை எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்று அண்மையில் நீதியமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் பகிரங்கமாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை கேட்டிருந்த கேள் [illegible] ஒன்றை [illegible] உரிமை

கோருகிறோம்; சுயநிர்ணய உரிமையை அதற்கேதான் நாம் பயன்படுத்துவோம்" என்று கூட்டணியின் செயலதிபர்கள் திரு. அமிர்தலிங்கம் அவர்களும் திரு. சிவசிதம்பரம் அவர்களும் ஒரே குரலில் திட்டவட்டமாக கூறியிருந்ததையும் இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமாகும்.

"தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தனிநாடுதான் ஒரே வழியென்று கொள்வதற்கில்லை. பெரும்பான்மை மக்கள் மத்தியில் இயங்கிவரும் அரசியற் கட்சிகள் விசேடமாக மாக்ஸிஸ லெனினிஸ கட்சிகள், தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளை பொறுத்தவரையில் நேர்மையான கொள்கையை பின்பற்றத்தவறியகாரணத்தினால் தமிழ் மக்கள் தனிநாடு கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில் மேற்கூறிய கட்சிகள் சரியான நிலைபாட்டை எடுப்பதன் மூலம், "தனிநாடு தவிர்க்கக்கூடியது; அவசியமற்றது;" என்ற எண்ணத்தை தமிழ்பேசும் மக்கள் மத்தியில் ஏற்படுத்த முன்வராத பட்சத்தில் தனிநாடு கோரிக்கை தவிர்க்க முடியாததாக வந்துகொண்டிருக்கிறது.'

திரு. வி. பொன்னம்பலத்தின் புதிய செந்தமிழர் இயக்கத்தின் அரசியல் அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. இது ஒன்றே செந்தமிழர் இயக்கத்துக்கும் விடுதலைக் கூட்டணிக்குமிடையேயுள்ள இலட்சிய முரண்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையிலும்—தமிழ் மக்கள் 1977 ஆடிப்பொதுத்தேர்தலின்போது தந்த திட்டவட்டமான தீர்ப்பின் அடிப்படையிலும் -வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின்படியும்—தனிநாடுதான் ஒரேவழி— மாற்றமுடியாத முடிவு— என்று நாம் நம்புகிறோம்! சுயநிர்ணய அடிப்படையில் நாம் வேண்டிநிற்பது சுதந்திரத் தமிழ் ஈழமே யென்று அறுதியிட்டுக் கூறிவருகிறோம்!

## அரசியல் மேடை

சிங்கள இடதுசாரிக்கட்சிகள் எப்படித்தான் தங்கள் போக்கினையும் நோக்கினையும் மாற்றிக்கொண்டாலும் —தனித் தமிழ் ஈழம் என்ற எமது நிலைப்பாடு கிஞ்சிற்றும் மாற மாட்டாது! அது உறுதியானது!

'தனிநாடு' என்பது வெறும் கோரிக்கை என்ற நிலையில்மட்டும் இன்று இல்லை; அதுவே இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடிநாதமான கொள்கையாகி, இலட்சியமாகி விட்டது!

தனிநாடு அவசியமற்றது; தவிர்க்கக்கூடியது என்ற பேச்சுக்கே கூட்டணியைப் பொறுத்தவரையில் இடமில்லை; 'தனிநாடு' என்பது நன்கு அலசி ஆராய்ந்து கூட்டணி எடுத்த முடிந்த முடிவு; 1977 பொதுத்தேர்தலில் தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்டமுடிவு!

"தனிநாடு" கொள்கையை தமிழ் மக்கள் "தவிர்க்கமுடியாத தள்ளப்பட்ட நிலையில்" மட்டும் ஏற்றுக் கொண்டவர்கள் அல்ல; வரலாற்றை ஆதரமாகக் கொண்டு சுதந்திர நாடாக முன்பு வாழ்ந்த தமிழ் ஈழம் மீண்டும் சுதந்திர நாடாக வாழவேண்டும் என்ற சுதந்திர உணர்வின் அடித்தளத்தில் நின்றே இன்று விடுதலை இயக்கம் நடைபோடுகிறது. "தள்ளப்பட்டாலென்ன, தள்ளப்படாவிட்டாலென்ன —எமது நாட்டை நாமே ஆளவேண்டும்" என்ற விடுதலை உணர்வின் அடிப்படையில் நின்றே தனித்தமிழ் ஈழத்துக்காகப் போராடுகிறோம்.

இத்தகைய தெளிவான சிந்தனையுடன் இயங்கும் மாபெரும் இயக்கமான தமிழர் விடுதலைக்கூட்டணியையோ, தமிழ் மக்களையோ யார்தான் குழப்பிவிடமுடியும்?

உன் அன்புத் தோழன்.

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

## மீண்டும் பள்ளத்தில் வீழ்கிறோமா?

தமிழ் மக்களின் வீழ்ச்சிக்கும் அவர்கள் மத்தியில் அடிமை மனப்பான்மை வளர்வதற்கும், சொந்தக் காலில், சொந்தப் பொருளாதாரத்தை உருவாக்கி அதில் நிலைத்து நிற்க முடியாத ஓர் மக்கள் கூட்டமாக தமிழ் மக்கள் கடந்தகாலத்தில் பின் தங்கிப்போனதற்குமான முக்கிய காரணிகளில் ஒன்று அரசாங்க உத்தியோக மோகம் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் காலத்தில் ஏற்படுத்த பட்ட இந்த "அரசாங்க உத்தியோகமோகம்" சிங்களவர்களைவிட தமிழர்களைத்தான் மிக அதிகமாகப் பாதித்தது. படிப்பது அரசாங்கத்தில் 'கிளறிக்கல்' உத்தியோகம் 'பெறத்தான் என்கிற ஓர் எண்ணம் தமிழர் குடும்பங்களில் ஏற்படலாயிற்று. "கோழி மேய்த்தாலும் கோறண மேந்தில மேய்க்கவேண்டும்." என்ற புதுமொழி இதன்பின்பே ஏற்பட்டது. அந்த அளவுக்கு தமிழ் மக்கள் அரசாங்க உத்தியோகங்களில் மனத்தைப் பறிகொடுத்து, அதன் போலித்தனமான வெளிக்கவர்ச்சியில் மூழ்கி, அடிமைவாழ்வுக்கு அடித்தளமிட்டனர்.

தமது சொந்தப் பொருளாதாரத்தை வளர்த்து அதிலேயே தங்கியிருந்து யாருக்கும் தலைவணங்காமல், தலைநிமிர்ந்து ஒரு காலத்தில் தனியரசு நடாத்திய தமிழர்கள், அரசனை நம்பி புருஷனை கைவிட்டதுபோல, அரசாங்க உத்தியோக மாயையில் மூழ்கி, தமக்கேயுரிய பொருளாதார வளங்களான கமத்தொழில், கைத்தொழில், கடற்றொழில் போன்றவற்றை அறவே கைவிட்டனர். பிறரிடம் கையேந்திப் பிழைக்கும் இழிந்த நிலை இதனால் தமிழ் சமுதாயத்துக்கு ஏற்பட்டது.

அரசாங்க உத்தியோக மோகத்தினால் தமிழ் சமுதாயத்தில் அடிமை மனப்பான்மை வளர்ந்தது; சுதந்திரமான சிந்தனைகளும், சுயேச்சையான எண்ணங்களும் மறைந்தது; கோழைத்தனமும் கோலேந்திகளுக்கு 'நல்ல பிள்ளைகளாக' நடந்து கொள்ளும் போக்கும் கொண்ட ஒரு சமுதாயமாக தமிழினம் மாறத் தொடங்கியது.

ஆனால் 1956 க்குப் பின் அடுத்தடுத்து இலங்கைத் தீவில் ஏற்பட்டு வரும் அரசியல் நிகழ்ச்சிகள் தமிழனைச் சிந்திக்கத் தூண்டின; தமிழனுக்கு அரசாங்க உத்தியோகங்கள் மறுக்கப் பட்டன; சிங்களவர்களுக்கே அரசாங்க உத்தியோகம் எனும் கொள்கை புகுத்தப் பட்டது. சிங்களம் படித்து தகுதி காண பரீட்சையிலே சித்தியடைந்தால் மட்டுமே தமிழர்களுக்கு அரசாங்க உத்தியோகம் நிலை பரமாகும என்ற சட்டம் ஏற்பட்டது.

இந்த நிலைமை தமிழர்கள் மத்தியில் ஒரு பெரிய சிந்தனை மாற்றத்தை தோற்றுவித்தது. நமது எதிர் காலம் நமது பொருளாதாரம், அரசாங்க உத்தியோகத்தில் அல்ல; நமது தமிழ் ஈழ மண்ணிலேயே தங்கியிருக்கிறது என்பதை நம்மவர்கள் உணரத் தொடங்கினர்; சிங்களம் படிக்க முடியாது என்று கூறி தமிழ் அரசாங்க ஊழியர்கள் ஏராளமானோர் அரச சேவையிலிருந்து இளைப்பாறினர்; பலர் தங்கள் அரசாங்க உத்தியோகங்களையே தூக்கியெறிந்து தமிழ் இளைஞர்களுக்கு வழிகாட்டி விழிப்பூட்டினர்.

தமிழ் மக்களின் எதிர்காலம்—பொருளாதார வாழ்வு—தெனனிலங்கை அரசாங்க உத்தியோகத்தில் இல்லை; சிங்களம் படிப்பதனாலும் இல்லை; எமது மண்ணிலேயே—எமது தாயகத்திலேயே தங்கியிருக்கிறது என்பதை உணர்ந்து விவசாயத்திலும், கைத்தொழில்களிலும், கடற்றொழிலிலும் நமது இளைஞர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வருகிற அளவுக்கு ஒரு பெரிய சிந்தனை மாற்றம் அண்மைக்காலமாக ஏற்பட்டு வந்திருக்கிறது!

ஆனால் இப்போது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்து, தொகுதிக்கு ஆயிரம் பேர் வேலை தரப்போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து—மீண்டும் நமது இளைஞர்கள் அரசாங்க உத்தியோகம் எனும் பொறிக்குள் விழுவதற்கு போட்டி போட்டுக் கொண்டு; தத்தமது தொகுதி பா.உ.க் களின் இல்லங்களுக்கு நாள் தோறும் படையெடுப்பதைப் பார்க்கும் போது—மறுபடியும் நாம் பள்ளத்துள் வீழ்கிறோமா—சுதந்திர ஆர்வம் கொண்டெழுந்த நமது இளம் சமுதாயம் மீண்டும் ஒரு முறை அடிமை வாழ்வுக்குள் விழப் போகிறதா—என்ற வேதனை மிகுந்த கேள்விகளே நம் நெஞ்சை அரிக்கின்றன. அரச உத்தியோக மோகத்திலிருந்து நமது இளம் சமுதாயத்தை காப்பாற்ற வேண்டிய, கை தூக்கிவிட வேண்டிய நம் தலைவர்களே—அவர்களுக்கு அரச உத்தியோகம் பெற சிபார்சு செய்ய வேண்டியிருப்பதும் வேதனை கலந்த ஒரு வேடிக்கையான நிகழ்ச்சிதான்.

நாம் மீண்டும் மீண்டும் தமிழ் இளைஞர்களுக்கு கூறுவது இதுதான்—அந்நிய சிங்கள ஏகாதிபத்தியத்தின் கீழ், அடிமை உத்தியோகம் பெற்று, ஆதிக்க மொழியான சிங்களத்தைப் படித்து அந்நியனுககு குற்றேவல் செய்வதிலும்— தாய்த் திரு மண்ணும் தமிழ் ஈழத்தாயை நம்புங்கள்.—பொன்னும் பொருளும், போதிய வளமும், எதிர் கால வாழ்வும் தமிழ் மண்ணிலேயே உண்டு; அந்த மண்ணை நம்புங்கள்; மண் வெட்டிகளை நம்புங்கள்! தன்னம்பிக்கை கொள்ளுங்கள்!

அரசாங்க உத்தியோகம் எனும் மாயமானின் பின்னால் தமிழ் இளைய சமுதாயம் செல்லுமானால— தமிழ்ஈழ மண் என்னும் சீதை சிங்களவர் வசமாவாள் இதுவே நமது எச்சரிக்கையாகும்!

# தமிழ் தொழிலாளர்களின் மே நாள் ஊர்வலத்தில் தமிழ்ஈழப்பிரிவினை முழக்கம்!

## அமிரை கட்டியணைத்து தொழிலாளி பாராட்டு!

யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் தொழிற்சங்கங்களும் செந்தமிழர் இயக்கமும் கூட்டாக நடத்திய மேதின ஊர்வலத்தில் பிரிவினைக் கோஷம் வான்முட்ட எழுந்தது. 'சிங்கள ஏகாதிபத்தியத்தின் சுரண்டலை ஒழிப்போம்" "வேட்டைக்காடா தமிழ் ஈழம், வீழ்ந்துபடுவதா தமிழினம், சுதந்திரத் தமிழ்ஈழம் அமைப்போம், தமிழ்ஈழமே எமது தாரக மந்திரம், பாகத்தைப்பிரிப்போம் பங்கினைப் பெறுவோம், பிரிவினையே எம் இலட்சியம்" என்பன போன்ற முழக்கங்களை ஊர்வலத்தில் வந்த தமிழ் தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்கள், மகளிர், ஆகியோர் எழுப்பிக் கொண்டு வந்தனர்,

ஊர்வலம், முத்திரைச்சந்தியிலிருந்து தமிழ் ஈழத் தந்தை செல்வாவுக்கு அஞ்சலி செலுத்தியபின்னர் ஆரம்பமாகியது. ஊர்வலத்துக்கு முன்னால் தந்தை செல்வாவின் பிரமாண்டமான உருவப்படம் ஒன்று எடுத்துவரப்பட்டது. உதய சூரியன் கொடிகள் பறந்திட, காரைநகர் கிழக்கு கூட்டணிக்கிளையின் பதாகை முன்செல்ல, தொடர்ந்து தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபரும் தமிழ் ஈழ முதல்வருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் காந்தித் தொப்பியும், உதய சூரியன் சால்வையுமணிந்து ஊர்வலத்தை தலைமை தாங்கி அழைத்துவந்தார். அவருடன், யாழ் பா. உ. திரு. வெ. யோகேஸ்வரன், வி. என். நவரத்தினம் பா. உ, பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ. திரு. த. இராசலிங்கம் பா. உ, வி. தர்மலிங்கம் பா. உ, சட்டத்தரணி, அ. குமரகுரு, அடலேறு மு. ஆலாலசுந்தரம், செந்தமிழர் இயக்க செயலாளர் வி. பொன்னம்பலம், சுதந்திரன் ஆசிரியர்கோவை மகேசன், தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக்கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன், யாழ் மாநகர முன்னாள் உறுப்பினர்கள், ஆ. துரைராச சிங்கம், நா. த. செல்லத்துரை, சி. நாகராசா, க. முருகரத்தினம் ஆகியோர் சென்றனர்.

தொடர்ந்து தமிழ்மகளிர் பேரவையினர், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் "மறவர் படைதான் தமிழ்ப்படை குலமானம் ஒன்றுதான் அடிப்படை, வெறிகொள் தமிழர் புலிப்படை இவர் வெல்வார் என்பது வெளிப் படை" என்ற காசிஆனந்தனின் கவிதை வரிகளை உணர்ச்சியோடு பாடியபடி வந்த காட்சி உள்ளத்தை தொடுவதாக இருந்தது.

இதைத் தொடர்ந்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் இலங்கைத்தமிழர் ஆசிரியர்சங்கம், மற்றும் பல்வேறு தமிழ் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் தத்தம் பதாகைகளுடனும் கையில் சுலோக அட்டைகளுடனும் ஊர்வலத்தில் வந்தனர். தமிழ் இளைஞர் பேரவையின் பல்வேறு கிளைகள், செந்தமிழர் இயக்கம் ஆகியனவும் ஊர்வலத்தில் வந்தன.

ஊர்வலம் வந்தபோது ஒரு தமிழ்த் தொழிலாளி உணர்ச்சி வசப்பட்ட நிலையில் ஓடிவந்து, தலைவர் அமிர்தலிங்கத்தைக் கட்டித் தழுவி, தமிழன் எதிர்க்கட்சி முதல்வனாகியதே போதும், அடுத்து தமிழ் ஈழத்தின் முதல்வர் ஆகவேண்டும் என்று தெரிவித்தகாட்சி உடம்பைப் புல்லரிக்கவைத்தது.

மொத்தத்தில், கூட்டணியின் மேதின ஊர்வலம்—தமிழ்ஈழ விடுதலை முழக்கத்தை — பிரிவினைக்கோஷத்தை — முன்வைத்தது. தமிழ் தொழிலாளர்கள் தாயகமாம் தமிழ் ஈழ நாட்டை சிங்கள ஏகாதிபத்திய முதலாளித்துவ காலனித்துவ சுரண்டல் ஆட்சியிலிருந்து விடுவிக்கத் தீர்மானித்துவிட்டனர் என்பதை கூட்டணியின் மே நாள் ஊர்வலம் உலகுக்கு அறிவித்தது.



உங்கள் கேள்விகளுக்கு **தலைவர்** அமிர்தலிங்கம் பதிலளிக்கிறார்!

சுதந்திரன் வாசகர்களின் கேள்விக்கு சுதந்திரன் மூலம் வாராவாரம் பதிலளிக்க தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் இசைவு தந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். உங்கள் கேள்விகள், இயக்கம், அரசியல், சமூகம், பொருளாதாரம் எவை சம்பந்தமானதாகவும் இருக்கலாம்.

கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:

அ. அமிர்தலிங்கம், பா. உ;
மே/பா.
ஆசிரியர் சுதந்திரன்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## தந்தை செல்வா நினைவாக
### சென்னையில் அனைத்துக் கட்சி பொதுக்கூட்டம்

தமிழ் ஈழத்தந்தை மூதறிஞர் அமரர் செல்வா அவர்களின் நினைவாக 26-4-78 புதன்கிழமை மாலை 6 மணிக்கு தமிழக—ஈழ நட்புறவுக்கழகம் சென்னை எழும்பூர் பெரியார் திடலில் ஓர் அனைத்துக்கட்சிக் கூட்டத்தை நடத்தியது. இக்கூட்டத்துக்கு திரு ந, அரணமுறுவல் தலைமை வகித்தார். தமிழக—ஈழநட்புறவுக்கழகத்தின் சார்பில் புலவர் பண்பழகன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

கூட்டத்தில் ஆற்காடு வீராசாமி (திமுக) புலவர் இந்திராகுமாரி (ஜனதா) வழக்கறிஞர் துரைசாமி (திராவிடர் கழகம்) திருமறவன் (பார்வாட் புளக்) அரு. கோபாலன். பாலபாண்டியன் (சட்டக்கல்லூரி மாணவர் தலைவர்) இரா. இளவரசு, தோழர் கே. மாணிக்கம் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) கே. சடகோபன் (இந்திரா காங்கிரஸ்) வழக்கறிஞர் மார்க்கபந்து (உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி) தோழர் 'நோக்கு' எம். எஸ். மணி, தமிழம் செம்பியன், ஏ. எஸ். மனவைத்தம்பி, எஸ். திரு ஞானசம்பந்தம் (மாணவர் திமுக) சேலம்பாவரசன், ஆகியோர் இக் கூட்டத்தில் பேசவிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ தமிழர் விடுதலை போராட்டம் ஒரு நாள் வெற்றியடைந்தே தீரும்!

## சென்னையில் நடைபெற்ற செல்வா நினைவு தினக் கூட்டத்தில் செஞ்சி ராமச்சந்திரன் முழக்கம்!

"ஈழத்திலும் சரி, வேறு எந்த நாடாயினும் சரி, மனித உரிமைகள் மறுக்கப்பட்டால் விடுதலை இயக்கம் நசுக்கப் பட்டால் தி.மு. கழகம் வெறுமனே பார்த்துக் கொண்டிராது. அவற்றை எதிர்த்து கண்டனக் குரல் எழுப்பியே தீரும். தந்தை செல்வாவின் வழியில் நாவலர் அமிர்தலிங்கத்தின் தலைமையிலே ஈழத் தமிழர்கள் நடத்தி வரும் விடுதலை போராட்டம் வெற்றி பெறும் நாள் அதிக தூரத்தில் இல்லை!"

இவ்வாறு சென்னையில் நடைபெற்ற தந்தைசெல்வா நினைவுநாள் கூட்டத்தில் உரையாற்றிய தமிழகசட்டமன்ற உறுப்பினரும் தி.மு.க பிரமுகருமான திரு. செஞ்சிராமச்சந்திரன் பி.ஏ.பி.எல் குறிப்பிட்டார்.

திரு. செஞ்சி ராமச்சந்திரன் மேலும் தனது உரையில் கூறியதாவது:

ஆங்கில ஆட்சி முடிந்து இலங்கை சுதந்திரமடைந்ததற்குப் பிறகு தமிழர்களின் உரிமை கீழ்நிலைப்படுத்தப்பட்டு சிங்களவர் ஏற்றம் பெற்றனர். இலங்கையில் ஒற்றை ஆட்சி முறை நடைபெறத் தொடங்கியது. தமிழுக்கு ஏற்றம்தந்திடவும் தமிழர்களது உரிமைகளைப் பாதுகாத்திடவும் தந்தை செல்வநாயகம் தமிழரசுக்கழகத்தைஉருவாக்கினார்.

சிங்களத்திற்குச் சமமான இடத்தைத் தமிழுக்கு அளித்திட வேண்டும். சுயாட்சித் தன்மையோடும் கூடிய உரிமையைத் தமிழர்களுக்கு வழங்கிட வேண்டும் என்று போராட்டம் நடைபெற்றது.

ஆனால் இலங்கையில் தமிழர்கள் எழுப்பிய மாநில சுயாட்சிக் கோரிக்கை ஏற்கப்படாதபோது தமிழர்கள் இரண்டாம்தர 'குடிமக்களாகக் கருதப்பட்டு அங்கிருந்து விரட்டப்படும் நிலை ஏற்பட்டபோது எல்லாக்கட்சிகளும் ஒன்று சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி அமைத்தனர். அந்த வ்டுதலைக்கூட்டணி இப்போது நாவலர் அமிர்தலிங்கம் தலைமையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. 168 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கைதேசியப் பேரவையில் இலங்கைத் தமிழர் கூட்டணி இப்போது பிரதான எதிர்க்கட்சியாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

இன்று உலகின் பல்வேறு நாடுகளில் — தென் ஆபிரிக்கா, ரொடீஷியா போன்ற நாடுகளில் விடுதலை முழக்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது. தியாகத்தினால் உரிமை பெற பல்வேறுநாடுகளில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் இலங்கையில் நாவலர் அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர்கள் விடுதலை முழக்கம் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் தமிழர்கள் உயர்கல்வி படிக்க இயலவில்லை. வீணாகக் கிடக்கின்ற அரசுக்குச் சொந்தமான நிலங்களை அவர்கள் தங்கள் உரிமையாக்கிக் கொண்டு விவசாயம் செய்ய முடியாது. அதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. ஈழத் தமிழர்கள் பல்வேறு வழிகளிலும் நசுக்கப்படுகிறார்கள். எனவே தான் அவர்கள் பொருளாதார விடுதலையும், இன விடுதலையும் கோருகிறார்கள்.

8 மாதங்களுக்கு முன்பு இலங்கையில் மிகப் பெரிய கலவரம்நடந்தது தமிழர்கள் ஒன்றுசேர்ந்து விட்டார்களே என்று அஞ்சிய சிங்களவர் தமிழர்களின் இயக்கத்தை அழிக்க காவற்துறையைஏவிவிட்டு துப்பாக்கியால் சுட்டுத்தமிழரைக் கொன்றனர். பெண்டிர் மானபங்கப்படுத்தப்பட்டனர்; கற்பழிக்கப்பட்டனர்; தமிழர்களுக்குத் தாங்கொணா கொடுமைகள் இழைக்கப்பட்டன.

உடனடியாக சில பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று நான் அப்போது சட்டமன்றத்தில் வலியுறுத்தினேன். தி. மு' கழகம் வலியுறுத்தியது.

தி. மு. கழகம் இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து சென்னை நகர வீதிகளில் பிரம்மாண்டமான பேரணியை நடத்தி இலங்கை ஹைகமிஷனர் அலுவலகத்தில் மனுக்கொடுத்தது. உலகத்தில் தமிழர்களின் குரல் எங்கெல்லாம் நசுக்கப்படுகிறதோ அதற்காகக் குரல் கொடுப்பவர் நமது ஒப்பற்ற தலைவர் கலைஞர் ஆவார்.

இரண்டு பாகிஸ்தான்கள் ஒன்றோடொன்று போரிட்டுக்கொண்ட நேரத்தில், கிழக்குப் பாகிஸ்தானை இந்திய அரசு ஆதரித்தது; வங்கதேசத்தை ஆதரித்தது. இது இன்னொரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையில் தலையிட்டது ஆகாதா? ஆனால் இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகிறபோது அதற்காகக் குரல் கொடுத்தால் அந்நிய நாட்டின் வெளி விவகாரக்கொள்கையில் தலையிடக்கூடாது என்கிறார்கள்.

தமிழர்களின் மொழி உரிமையும், பொருளாதார உரிமையும் பறிக்கப்பட்டு இலங்கையிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படும் நிலையில் அதைத்தடுக்கும் ஒரே குரலாகத் தந்தை செல்வா உருவானார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்டு யாருமே வெற்றி பெற முடியாத அளவுக்கு அவர் மிகப்பெருந்தலைவராகவிளங்கினார். காங்கேசன் துறைத் தொகுதியில் இரண்டாண்டு காலம் இடைத் தேர்தல் நடத்தாமலேயே இலங்கை அரசு தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தது; காலம் கடத்தியது.



ஆனால் மீண்டும் அங்கேதேர்தல் நடத்தப்பட்ட போது செல்வாதான் வெற்றி பெற்றார். அவ்வளவு செல்வாக்குப் பெற்றவராக அவர் திகழ்ந்தார்.

மனித உரிமைகள் மறுக்கப்பட்டு விடுதலை இயக்கம் நசுக்கப்பட்டால் அது எந்த நாடாக இருந்தாலும் அதை கண்டித்துக் குரல் கொடுக்க வேண்டியது நமது கடமை.

இலங்கைத் தமிழர்கள் கடந்த 30 ஆண்டு காலமாக உரிமைக்காகப் போராடுகின்றனர். ஆனால், ஐ. நா. சபையில் இதுபற்றிப் பேச ஆளில்லை. தேவைப்பட்டால் ஐ. நா. சபை மூலம் எடுத்துச் சொல்லியாவது, இந்திய அரசு தலையிட்டு இலங்கைத் தமிழர்களுக்கு உரிமையைப் பெற்றுத் தர வேண்டும்;

இவ்வாறு செஞ்சி இராமச்சந்திரன் பேசினார்.

பெருஞ்சித்திரனார்

தந்தை செல்வா முதலாமாண்டு நினைவு நாளில் பெருஞ்சித்திரனார் பேசியதாவது!

ஈழத் தமிழரின் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் தனது வாழ்நாள் முழுதும் உழைத்தபெருமகன் தந்தை செல்வா அவர்களின் முதலாமாண்டு நினைவு நாள் கூட்டம் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தமிழர்கள் தங்கள் வரலாற்றுப் பெருமைகளை, மொழியின் சிறப்பை உரிமைகளை நினைத்துப் பார்க்க வேண்டிய நாள் இந்நாள். இன்று தமிழினத்தை வீழ்த்தி அழித்தொழித்திட யார்யாரெல்லாமோ முயன்று கொண்டிருக்கிறார்கள்.

தமிழனுக்கு மொழி, இனம், நாடு ஆகிய மூன்றும் முக்கியம். அதில் மொழி முதன்மையானது. தமிழர்கள் தங்கள் மொழியின் சிறப்பை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். வேற்று நாடுகளிலிருந்து வந்த ஒரு குறிப்பிட்ட இனத்தவரின் செய்கையால் தமிழ் மொழியில் இடைக்காலத்தில் கலப்பு ஏற்பட்டது!

வேற்று மொழிக் கலப்பு நீங்கிய தூய தமிழில் பேச, எழுத, சிந்திக்க தமிழர்கள் முயல வேண்டும்.

இலங்கையிலே வாழுகிற தமிழர்கள் பூர்வகுடியினர் ஆவர். இதற்கு வரலாறு உள்ளது. ஆனால், அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன; அவர்கள் அடிமைப்படுத்தப்படுகிறார்கள். இந்நிலையை எதிர்த்துதங்கள் உரிமையை நிலைநாட்ட ஈழத் தமிழர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். என்றேனும் ஒருநாள் அவர்கள் நிச்சயம் வென்றே தீருவார்கள்.

இவ்வாறு பெருஞ்சித்திரனார் பேசினார்.

கூட்ட நிகழ்ச்சி

தந்தை செல்வா அவர்களின் முதலாமாண்டு நினைவு

—8-ம் பக்கம் பார்க்க

## தமிழிளைஞர்கள் மீது தொடர்ந்து வேட்டை

### சட்டத்தை மீறுகின்றனர் பொலிசார்!

தமிழ்இளைஞர்பேரவை, தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகியவற்றை சேர்ந்த அப்பாவி இளைஞர்கள் சி. ஐ. டி. யினராலும், பொலிசாராலும் தொடர்ந்துவேட்டையாடப்படுகின்றனர். ஒருவரை விசாரணைக்கு அழைத்துச் சென்றால் அவரை 24 மணிநேரத்துக்குள் விடுதலை செய்யவேண்டும் அல்லது நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்படவேண்டும் என்பது சட்டம்.

இந்தச் சட்டத்தைப் பொலிசார் உதாசீனம் செய்து விட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுவோரை நாள்கணக்காக நீதிமன்றத்தில் பாரப்படுத்தாது தம் மனம் போன போக்கில் வைத்திருந்து சித்திரவதை செய்கின்றனர் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

மட்டக்களப்பில் சுரேஷ் குமார் என்ற இளைஞரை ஆறுநாட்கள் தொடர்ந்து வைத்திருந்து அடித்து உதைத்து சித்திரவதை செய்து விட்டு பொலிசார் விடுதலை செய்துள்ளனர். இவர் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்படவில்லை.

அதேசமயம் வெளிநாடுகளுக்கு செல்லும் அப்பாவி தமிழ் இளைஞர்களையும் விமான நிலையங்களில் வைத்து அவர்கள் பிரயாணத்தை தடுத்து நிறுத்தி பொலீஸ் நிலையங்களுக்கு கொண்டுசென்று அடித்து உதைத்து பொலிசார் துன்புறுத்துவதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாரம் புத்தூரிலும் இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## சிக்கனமே சிறந்த செல்வம்

சிக்கன சலவைக்கு மில்க்வைற் பார்சோப் வாங்கி உபயோகியுங்கள். பெரியபார் சோப்பாகவும், சிறிய பார் சோப்பாகவும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது. மேலுறைகளை சேகரித்து அனுப்பி சிறந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பூட்டோவின் தலை உருளுமா?

பாகிஸ்தானைப் பிடித்த சாபக்கேடுதானோ என்னவோ, அங்கே ஆட்சிப்பொறுப்புக்கு வருபவர்களெல்லாமே, ஒன்று ராணுவப் புரட்சியாளர்களால் துரத்தப்படுகிறார்கள், அல்லது மக்களின் வெறுப்புக்குள்ளாகி படுகொலை செய்யப்படுகிறார்கள்! முகமது அலி ஜின்னா ஒருவர் மட்டுமே இதற்கு விதி விலக்கு.

இந்தியா பிரிவினை செய்யப்பட்ட பிறகு, பாகிஸ்தானில் முதலாவதாக பிரதமர் பதவியேற்றவர் லியாகத் அலிகான். ஜின்னாவின் நம்பிக்கைக்குரிய நண்பராக விளங்கிய அவர் 1951 அக்டோபரில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1951 முதல் 1955 செப்டம்பர் வரை குலாம் முகமது கவர்னர் ஜெனரலாக இருந்தார். ஜனநாயகமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் க்வாஜா நஸிமுதீனை இவர் 1953-ல 'டிஸ்மிஸ்' செய்தார். ஆனால், இவரே அதன்பிறகு சிக்கந்தர் மிர்ஸாவால் பதவியிலிருந்து துரத்தப்பட்டார்! குலாம் முகமது 1956-ல் மரணமடைந்தார்.

1955 ஆகஸ்ட் முதல் 1958 அக்டோபர் வரை ஜனாதிபதியாக இருந்த சிக்கந்தர் மிர்ஸா, அயூப்கானால் துரத்தப்பட்டு வேறொரு நாட்டில் 'அடைக்கலம்' புகுந்தார்.

## அயூப்கான்

ராணுவ ஆட்சி நிர்வாகியாக முதலில் அறிவிக்கப்பட்ட அயூப்கான் பின்பு ஜனாதிபதியானார். இவர் காலத்தில் வெளி உறவு அமைச்சராக இருந்தவர் பூட்டோ. 1969-ல் பூட்டோ கைது செய்யப் பட்டதையடுத்து நாடெங்கும் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன. இதன் விளைவாக, அயூப்கான் 1969-மார்ச்சில் பதவியிலிருந்து விரட்டப்பட்டார். அவர் 1974-ல் மரணமடைந்தார்.

ராணுவ ஆட்சி நடத்திய யாகியாகான், கடைசியில் பங்களாதேஷ் போரையடுத்துப் பதவி விலக நேர்ந்தது. பாகிஸ்தானில் நடந்த தேர்தலில் அமோக வெற்றி பெற்று, பூட்டோ பிரதமரானார்.

குழப்பம் விடவில்லை. அவர் செய்த காரியங்கள் மக்கள் மத்தியிலே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. திடீரென்று ராணுவப்புரட்சி நடந்தது. ஜியா-உல்-ஹக் பாகிஸ்தானின் ஆட்சித் தலைமையை ஏற்றார்.

## கொல்லச் சதி!

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 3ம் தேதியன்று பூட்டோ, ராணுவ ஆட்சியாளரால் கராச்சியில் கைதுசெய்யப்பட்டார். அவருடன் மேலும் நால்வர் கைதாயினர். தனது அரசியல் எதிரியைக் கொல்லச் சதி செய்ததாக பூட்டோ மீது குற்றம் சாட்டப்பட்டது.

பூட்டோ ஆட்சியிலிருந்த போது அவரை மிகக்கடுமையாக விமர்சித்தவர் அகமது ரேசா கசூரி என்பவர். பாராளுமன்ற உறுப்பினரான கசூரி தனது தந்தை நவாப் முகமது அகமது கானுடன் 1974ல் ஒரு நாள் காரில் சென்று கொண்டிருந்தார். அந்தக் கார் நடுவழியில் மறிக்கப்பட்டு, இயந்திரத் துப்பாக்கிகளின் தாக்குதலுக்குள்ளாயிற்று. இதில் கசூரியின் தந்தை அகமதுகான் மரணமடைந்தார். கசூரி உயிர் தப்பினார்.

இச் சம்பவத்திற்கு பூட்டோவுடன் பாகிஸ்தான் ஃபெடரல் பாதுகாப்பு போலீஸ் முன்னாள் இயக்குநர் மியான் முகமது அப்பாஸும் மற்றும் 3 அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர். வழக்கு விசாரணை லாகூரில் நடந்தது. லாகூர் ஹைகோர்ட் தலைமை நீதிபதி முஷ்டாக் ஹுசேன் தலைமையிலான 'ஃபுல்பெஞ்ச்' இவ்வழக்கை அக்டோபர் 11 லிருந்து விசாரித்தது. பொதுவாகவே, கொலை வழக்கு விசாரணையானது வெளிப்படையாக நடைபெறும். ஆனால், பூட்டோ மீதான வழக்கில் அவரது தரப்பு சாட்சிகளெல்லாம் 'ரகசியமாக' விசாரிக்கப்பட்டனர். அவர்கள் கூறிய சாட்சியம் என்னவென்று வெளியே தெரியாது.



வழக்கத்திற்கு மாறாக, தலைமை நீதிபதி முஷ்டாக் ஹுசேன், பி.பி.சி. மற்றும் சில வெளிநாட்டு நிருபர்களை அழைத்து, தாங்கள் நடத்தும் விசாரணை நியாய பூர்வமானது நேர்மையானது என்று கூறியதுடன், மேலை நாட்டுப் பத்திரிகையாளரை விசாரணையின்போது இருந்து கவனிக்கும்படியும் கோரினார்.

ஜுலை மாதம் ஜியா-உல் ஹக் நடத்திய ராணுவப் புரட்சி தவிர்க்க முடியாதது. தேவையானது என்று பாகிஸ்தான் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது.

தலைமை நீதிபதியின் போக்கு சரியில்லையென்றும் தனது வழக்கை வேறு கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்றும் பூட்டோ கோரினார். ஆனால், அந்த முயற்சி பலனளிக்காததால், ஜனவரி 9-ம் தேதியிலிருந்து விசாரணையைப் பகிஷ்கரித்தார்.

மார்ச் 5ம் தேதி விசாரணை முடிந்தது. தீர்ப்பு கூறும் தேதி அப்போது அறிவிக்கப்படவில்லை. ஆனால், அன்றிலிருந்தே நாடு முழுவதும் ராணுவச் சட்டம் 'கெடுபிடி'யாக அமலாக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான பூட்டோ ஆதரவாளர்கள் இரவோடு இரவாக காரணமின்றி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

## தூக்குத்தண்டனை

லாகூர் உயர்நீதி மன்றம் பூட்டோவுக்கும் அவரது 4 சகாக்களுக்கும் தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பளித்து விட்டது.

தற்போது இத்தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம்கோர்ட்டில் பூட்டோ 'அப்பீல்' செய்திருக்கிறார். அங்கும் தண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டு விட்டால், ராணுவ ஆட்சித் தலைவரான ஜியா-உல் ஹக்கிடம் 'கருணை மனு' போட வேண்டிய நிலைமை உருவாகும்.

பூட்டோவின் கதி என்னவாகும் என்று உலகம் முழுவதும் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

பாகிஸ்தானில் அமைதி வெகுவாகச் சீர்குலைந்து போயிருக்கிறது. ஒரு காலத்தில் பூட்டோவை எதிர்த்த மக்களே இப்போது அவருக்கு ஆதரவாக கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள்.

## மனைவியும் மகளும்

பூட்டோ ஆதரவு பிரச்சாரத்தில் முன்னணி வகிப்பவர் அவரது அருமை மனைவியான பேகம் நஸ்ரத்.

பூட்டோவின் அன்பு மகள் பெனஸிர் (24வயது) தனது தந்தையின் உயிரைக் காப்பாற்ற ஆதரவைத்திரட்டினார்.

ஆனால், இப்போது பூட்டோவின் மனைவி லாகூரிலும், மகள் கராச்சியிலும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

லாகூரிலிருந்து 10 மைல் தொலைவிலுள்ள கோட்லக்பட் சிறைச்சாலையின் தனிக் கொட்டடியில் பூட்டோ இருக்கிறார்.

பூட்டோ மீதான தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்று ஜியா-உல்-ஹக்கைத் தெரிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டுப் பத்திரிகைகளெல்லாம் பூட்டோ உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று எழுதுகின்றன.

அமெரிக்க, ரஷ்யா, சீனா, மற்றும் அரபுநாடுகள் இந்த விவகாரத்தில் கவலை கொண்டுள்ளன.

## ஆட்சி கவிழும்!

பூட்டோ தூக்கிலிடப்பட்டால், பாகிஸ்தானில் ரணகளரி ஏற்படும் என்றும், தற்போதுள்ள ராணுவ ஆட்சி கவிழ்ந்துவிடும் என்றும் அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

முன்பு ஒருமுறை ஐ. நா. சபையில் பேசும்போது ஆவேசமாக இந்திய நாய்கள், என்று ஏசியவர்தான், இந்த பூட்டோ! பங்களாதேஷ் போரின்போது முஜிபுர் ரகுமான் கைது செய்யப்பட்டு பாகிஸ்தான் சிறையிலடைக்கப்பட்டார். அவர் கண்ணெதிரில் புதைகுழி வெட்டப்பட்டது. ஆனால் முஜிபுரின் உயிரைக்காத்து பத்திரமாக பங்களாதேஷுக்கு அனுப்பியவரும் இந்த பூட்டோ தான்!

இந்தியாவுடன் நடந்த போரில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு 'சிம்லா ஒப்பந்தம்' என்று இறங்கி வந்தவரும் இவரே.

## மது மங்கைப் பிரியர்!

ஆடம்பரமாகக் காட்சியளிக்க விரும்பும் பூட்டோவுக்கு மதுவும், மங்கையும் ரொம்பவும் பிடிக்கும்.

அவர் பேசினால் அனல் பறக்கும் மக்களின் உணர்ச்சிகளைப் பயன்படுத்துவதில் வல்லவர்; அரசியலில் அவர் செய்யாத வித்தை இல்லையென்றே கூறலாம்.

இப்படிப்பட்ட வெவ்வேறு குணங்களைக் கொண்டவர் பூட்டோ.

பூட்டோ குற்றவாளியா, இல்லையா என்பதைவிட, அவர் உயிர் பறிக்கப்பட வேண்டுமா காப்பாற்றப்பட வேண்டுமா என்பதே இன்றைய கேள்வி.

பூட்டோவைத் தூக்கிலிடுவதன் மூலம் பாகிஸ்தான் அமைதியைக் கண்டுவிட முடியாது.

அவரது உயிருக்கு ஏதாவது நேர்ந்தால், பாகிஸ்தான் பற்றியெரியும் என்ற அச்சம் எல்லோருக்கும் இருக்கிறது.

## சர்வதேச பிரச்சனை

இதை வெறும் உள்நாட்டுப் பிரச்சனையென்று ஒதுக்கிவிடுவதற்கில்லை. சர்வதேச அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தநபர் பூட்டோ என்பதால், உலகம் உன்னிப்பாகக் கவனிக்கிறது.

"நீதியை மதிப்பேன்" என்கிறார் ராணுவத் தலைவர் ஜியா.

ஆனால், பூட்டோ எதைப் பற்றியும் கவலைப்படாதவரைப்போல, தூக்குத்தண்டனை கைதிகளுக்குரிய கொட்டடியில் அமைதியாக இருக்கிறார்!

இந்த வழக்கில் ஒருவேளை பூட்டோ விடுதலை பெற நேர்ந்தால்கூட, சுதந்திரமாக வெளியில் நடமாட முடியுமா என்பது சந்தேகமே! ஏனென்றால் பூட்டோவுக்கு எதிராக 40 வழக்குகள் காத்திருக்கின்றனவாம்! அதைக் காரணமாக்கி மீண்டும் சிறையில் தள்ளப்படுவார் என்று சொல்கிறார்கள்.

பூட்டோவின் கதி என்னவாகும்? பொறுத்திருந்து பார்ப்போம்.

(காண்டீபம்)


சன்சோனி ஆணைக்குழுச் சாட்சியங்கள்:
—நிகழ்ச்சிப் பதிவேட்டின் தமிழாக்கம்—

**ஆவணி அமளி-2**

தமிழ்த் தொகுப்பு: க. சச்சிதானந்தன்

விற்பனை:

**காந்தளகம்,
213, காங்கேயன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.**

கொழும்பில் கிடைக்குமிடம்:
இராஜேஸ்வரி பவான் — கோட்டை,
கிறீன்லன்ட்ஸ் ஒட்டல் — பம்பலப்பிட்டி.

**விலை 4-50**

வி. பி. பி. உண்டு. வியாபாரிகட்குக் கழிவு—


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஒரு முக்கிய கட்டம்;

# ராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகம்!



ஏப்ரல் 13ல் இந்திய விடுதலைப் போர் வரலாற்றிலே மிகவும் புனிதமான நாளாகும். 1919 ஆம் ஆண்டில் ஏப்ரல் 13-ம் நாளிலேதான் "பஞ்சாப் படுகொலை" நிகழ்ந்தது. 1930 ஆம் ஆண்டில் அதே ஏப்ரல் 13ஆம் நாளிலேதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தமிழ் நாட்டிலே உப்பு சத்தியாக்கிரகப் போர் தொடங்கியது.

1930 மார்ச் 12-ஆம் நாளிலே காந்தியடிகள் "தண்டி" என்னும் பிரதேசத்தில் உள்ள அரசாங்க உப்பளத்தை முற்றுகையிட 78 தொண்டர்களுடன் ஆமதாபாத் சபர்மதி ஆசிரமத்திலிருந்து புறப்பட்டார்.

"வெற்றியின்றேல் வீடு திரும்பேன்' என்று சூளுரைத்து, ஆசிரமத்தை விட்டு தண்டி நோக்கி ஐயன் யாத்திரை புறப்பட்டார்.

இதற்கு ஒரு திங்கள் கழித்து—ஏப்ரல் 13ஆம் நாளிலே வேதாரண்யத்திலுள்ள அரசு உப்பளத்தை முற்றுகையிட 100 தொண்டர்களுடன் திருச்சியிலிருந்து ராஜாஜி கால் நடையாக யாத்திரை தொடங்கினர்.

இதற்கு முன்பு தமது யாத்திரையில் கலந்து கொள்ள 100 தொண்டர்களைத் திரட்டுவதற்கென்றே தமிழ் நாட்டில் ஒரு சுற்றுலாவை நடத்தினர். நாட்டில் தொண்டர்களுக்குப் பஞ்சமில்லையென்றாலும், 'சத்தியாக்கிரகம்' என்னும் தத்துவத்தின் பொருள் அறிந்து தம்மைப் பின்பற்றுவோரை ராஜாஜி ஆய்ந்து பார்த்து தேர்ந்தெடுத்தார்.

ஏப்ரல் 13-ம் தேதியன்று அதிகாலையில் திருச்சி டி.எஸ். எஸ். ராசன் அவர்களின் இல்லத்திலிருந்து தொண்டர் படை புறப்பட்டது. திரு. டி. எஸ். எஸ். அவர்களின் அருமை மகள், படைத்தலைவர் ராஜாஜிக்கு நெற்றியில் திலகமிட்டு, ஆரத்தி எடுத்து, திருஷ்டி கழித்து "வெற்றி பெறுவீர்களாக!" என்று வாழ்த்துக்கூறி வழியனுப்பி வைத்தார்.

இந்த யாத்திரையின் தொடக்கத்தில் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளையின் "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது" என்ற போர் முழக்கப் பாட்டை சத்யாக்கிரகத் தொண்டர்கள் பாடிச் சென்றனர். இந்த யாத்திரைக்கென்றே அப்பாடல் புனையப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகத் தொண்டர் படை காரணமாக அருமையான புரட்சிக் கவிதை ஒன்று தமிழ் மொழிக்குக் கிடைத்தது. பாரதியின் வழி வந்த தேசியக் கவியாக நாமக்கல் கவிஞர் நாட்டிற்கு அறிமுகமானதும் இந்தச் சந்தர்ப்பத்தில் தான்!

காந்தியடிகளின் மனங்கவர்ந்த பக்திப் பாசுரமான "ரகுபதி ராகவராஜாராம்" என்ற பாடலையும் தொண்டர் படையினர் பாடிச் சென்றனர். வைஷ்ணவ பஜனைப்பாட்டாக அல்ல; சர்வசமய சமரச கீதமாக! வைணவத் தெய்வமான 'ரகுபதி ராகவ ராஜாராமனை 'மட்டுமின்றி, அல்லாவையும் இந்தப்பாடல் மூலம் பக்தி செய்ய முடிகிறதல்லவா?

பாரதியார்பாடிய ராணுவ வழி நடைப் பாடல் என்று சொல்லத்தக்க "அச்சமில்லை அச்சமில்லை; அச்சமென்பதில்லையே?" என்ற பாடலையும் ராஜாஜி உட்பட தொண்டர் படையினர் அனைவரும் பாடிய வண்ணம் வீர நடைபோட்டு, திருச்சி நகரைக்கடந்து, மேலும் பல ஊர்களையும் தாண்டி, தஞ்சை மாவட்டத்தின் எல்லையை அடைந்தனர்.

அப்போது அந்த மாவட்டத்திலே ஏ. ஜே. தாரன் என்னும் ஆங்கிலேயர் கலெக்டராக இருந்தார். ராஜாஜியின் தலைமையில் ஏகாதிபத்திய எதிர்ப்புச்சேனை திருச்சி மாவட்டத்தைத் தாண்டி தஞ்சை மாவட்டத்திற்குள் நுழையப் போகிறது என்ற செய்தியை அறிந்ததுமே கலெக்டர் தாரன் துரை அடக்கு முறை கரடியைக் கட்டவிழ்த்து விட்டார்,

வேதாரண்யத்திற்குச் செல்லும் வழி நெடுகவுள்ள நகரங்களிலும், கிராமங்களிலும் தண்டோரா ஒலித்தது. "சத்தியாக்கிரகப்படையினருக்கு மாலை அணிவித்தாலும், உணவு தந்து உபசரித்தாலும் தங்க இடமளித்தாலும், அப்படிச் செய்வோருக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும்'!—என்பது தண்டோரா மூலம் கலெக்டர் தாரன் விடுத்த செய்தி—இல்லை, 'மிரட்டல்'!

திரு. தாரனின் மிரட்டல் பலிக்கவில்லை. ஊர்தோறும் தளபதி ராஜாஜியும், தொண்டர் படையினரும் தேசபக்தியுடைய தமிழர்களால் உபசரிக்கப் பட்டனர். குடந்தை நகரிலே கோலாகல வரவேற்பு திருவையாற்றிலே தேச பக்த மாவீரர்களுக்கு ராஜோபசாரம்! ஒவ்வொரு ஊரின் எல்லையிலும் மேள தாளங்களுடனும், வெடி முழக்கத்துடனும் சத்தியாக்கிரகப்படைக்கு வரவேற்பு தரப்பட்டது.

'செங்கோலின் எதிரே சங்கீதம் செல்லாது' என்பது தமிழ் பழமொழி. வெள்ளைய ராட்சி செங்கோல் அல்ல; அது; கொடுங்கோல். அதனால், அந்தக் கொடுங்கோலுக்கு முன்னே தமிழருடைய சங்கீதம் செல்லும் என்பது நிரூபிக்கப்பட்டது. தொண்டர் படை சென்ற ஊர்களிலே ஒவ்வொரு வீட்டிற்கு முன்னேயும் வரவேற்புக் கோலம்! அதிலே, ராஜாஜிக்கு ஜே' என்ற வாசகம்! வீட்டிற்கு வீடு வீரத் தமிழ் மகளிர் ஆரத்தி எடுத்தனர். வழிநெடுக இங்கு மங்குமாக சில ஊர்களிலே உப்பு சத்தியாக்கிரகத் தொண்டர் படையை வரவேற்று உபசரித்தவர்களில் சிலர் கைதாகினர் அவர்களிலே சிலர், நீதிமன்றங்களிலே அதிகபட்சம் ஓராண்டு கால அளவு தண்டனையும் பெற்றனர்! அவர்களிலே, குடந்தை பந்துலு ஐயரும் புகழ் மிக்க எழுத்தாளர் திரு. வ. ரா. வும் உண்டு.

வீர கோஷங்களை எழுப்பிக் கொண்டும், பொதுக்கூட்டங்களில் சொற்பொழிவாற்றிக் கொண்டும் சத்தியாக்கிரகிகள் சென்றனர் என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் வேலை அந்த அளவில் முடிந்துவிடவில்லை. அவர்களின் தளபதி யார்? தென்னாட்டுக் காந்தி என அந்நாளில் புகழப்பெற்ற ராஜாஜி அல்லவா?

**ம. பொ. சி.**

சேரிகளுக்குச் சென்று தெருக்கூட்டினார்கள். தாழ்ந்த சாதியினர் பயன்படுத்தும் கக்கூசுகளைச் சுத்தம் செய்தனர்! காலை — மாலை நேரங்களில் கிராமவாசிகளைக் கூட்டி வைத்து, பஜனை நடத்தினர்! கதர் அணியுமாறும். தீண்டாமையை ஒழிக்குமாறும், மதுவைக் கைவிடுமாறும் தாங்கள் சென்ற ஊர்தோறும் பிரசாரம் செய்தனர். கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தம்செய்யப் புறப்பட்ட படையல்லவா! அந்தப் படையின் போர் முறை ஆக்கவழிப்பட்டதாகத்தானே இருக்கும்! இடையிடையே சில ஊர்களில் ராஜாஜி சொற்பொழிவு நிகழ்த்தினர்;

இறுதியாக, ஏப்ரல் 28ல் "குருக்ஷேத்திர பூமி"யான வேதாரண்யத்தை அடைந்தது. தளபதி ராஜாஜியின் தலைமையில் சென்ற உப்பு சத்தியாக்கிரகத் தொண்டர் படை!

இந்த நேரத்திலே வட புலத்தில் உப்பு சத்தியாக்கிரகப் போர் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. உலகோரின் கண்களெல்லாம் காந்திஜியின் தலைமையில் உப்பு சத்தியாக்கிரகப் போர் நடந்த தண்டியை நோக்கியது:

தண்டியில் காந்திஜி கைது செய்யப்பட்டார்.

பீகாரில் ராஜன் பாபு சிறைப்பட்டார்.

டில்லியில் பண்டித மதன் மோகன் மாளவியா கைதானார்.

பம்பாயில் சர்தார் படேல் கடற்கரையில் உப்பு காய்ச்சியதற்காகக் கைது செய்யப் பட்டார். அந்த நாளிலே பம்பாய் நகரமே போர்க்களமாக மாறியது.

"வந்தே மாதரம்" என்ற கோஷம் நாடெங்கணும் ஒலித்தது.

உத்தரப் பிரதேசத்தில் மோதிலால், ஜவகர்லால் உட்பட அவர்களுடைய குடும்பமே உப்பு சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டு, ஆனந்தபவன வாழ்வைத் துறந்து, காராக்கிருகச்சிறையில் அடைப்பட்டது. நேரு குடும்பத்தினர் பிற்காலத்தில் டில்லி செகரட்டேரியட்டில் இடம்பெற்றது மட்டுந்தான் சிலருக்கு நினைவிருக்கிறது.

விடுதலைப் போராட்ட காலத்திலே அப்பன் மோதிலால், அன்னை சொரூபாரணி, அருமைமகன் ஜவகர்லால், அவர் மனைவி கமலா, நேருவுடன் பிறந்த சகோதரிகள், அவர்களை மணந்த கணவன்மார்கள்— இப்படி குடும்பம்முழுவதுமே சிறைப்பட்ட காலம் அது.

ஒரு லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் நாடெங்கணும் சிறைப்பட்டு விட்டனர்.

மீண்டும் வேதாரண்யத்திற்குத் திரும்பி வருவோம்.

ராஜாஜி படையினரின் வருகையை எதிர்பார்த்து வேதாரண்ய உப்பளத்திற்கருகே வெள்ளம் போல் தமிழர் கூட்டம்! வேடிக்கை பார்க்க அல்ல; தடையை உடைத்து உப்பை அள்ளும் போர் வீரர்களுக்கு ஆதரவு கொடுக்க! முடிந்தால் அவர்களுடன் சேர்ந்து சிறைபுக!

வேதாரண்ய உப்பளம் அரசுக்குச் சொந்தமானது. அடக்குமுறை அட்டகாசங்களையெல்லாம் அலட்சியப்படுத்தி தளபதி ராஜாஜியும், அவரது தொண்டர் படையினரும் உப்பை அள்ளினர். உப்பளத்தில்தேங்கிக்கிடந்த நீரை முகர்ந்தெடுத்து, அடுப்பிலேற்றி உப்பு காய்ச்சினர். உடைபட்டது தடைச் சட்டம்! உடைந்தது கலெக்டர் தாரன் போட்ட சட்டம் மட்டும் அல்ல; பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும்தான்!

பாண்டியன் ஆண்ட பழம் பெரும் நாட்டிலா, பரங்கியர் ஆதிக்கம்? சேரலர் கோலோச்சிய செந்தமிழ் நாட்டிலாவெள்ளையர் ஆதிக்கம்? சோழன் ஆண்ட நம் சொந்தநாட்டிலா. வந்தேறிகளின் ஆதிக்கம்?—என்றெல்லாம் வினவெழுப்பி, "ஆங்கிலேயர் ஆதிக்கத்தைதகர்ப்போம்" என்று ஆரவாரித்தனர் வீரத்தமிழர்கள்!

ராஜாஜீ கைதானதும் அவருக்கு அடுத்தபடியாக திரு. சந்தானம் பொறுப்பேற்று, சட்டத்தைமீறி உப்பு காய்ச்சினர். அவரும் கைது செய்யப்பட்டார், அவருக்கு அடுத்த சர்வாதிகாரியாக மட்டப்பாறை சிங்கம் வெங்கட்ராமய்யர் களம் புகுந்து கைதியானர். அடுத்து, காந்தி கிராமம் ஜி. ராமச்சந்திரன்! அவரும் கைது செய்யப்பட்டார்!

இப்படி, சில நாட்கள் போராட்டம் நடந்த பின்னர், வேதாரண்யம் சத்தியாக்கிரக முகாமை போலீஸ் படையினர் ஆக்கிரமித்துக் கொண்டனர். முகாமிலிருந்த தலைவர்களையும் தொண்டர்களையும் ஒருங்கே கைது செய்து, பல்வேறு தண்டனைகளுக்கு உட்படுத்தி, வெவ்வேறு சிறைகளுக்கு அனுப்பி வைத்தனர். சத்தியாக்கிரக முகாமின் கொட்டகைகூடப் பிய்த்தெறியப்பட்டது போலீசாரால்! ஆம்; வீரர்கள் தங்கியிருந்த முகாம் வெட்ட வெளியாக்கப்பட்டது!

திருச்சியிலிருந்து தளபதி ராஜாஜியின் தலைமையில் புறப்பட்ட உப்பு சத்தியாக்கிரகத் தொண்டர்படையினர், 15 நாட்கள் கால் நடையாகவே நடந்து சென்று, ஏப்ரல் 28ம் தேதியன்றுவேதாரண்யம்போய்ச் சேர்ந்த பின்னர் மறுநாள் முழுவதும் அனைவரும் உண்ணா நோம்பு இருந்து, போரில் வெற்றிபெற அருளுமாறு இறைவனை வேண்டினர். ஏப்ரல்30ம் தேதியன்று சில தொண்டர்களுடன் ராஜாஜி கடலருகே சென்று, சட்டத்தை மீறி உப்பை அள்ளினர். உடனே கைது செய்யப்பட்டார். மன்னார்குடி மாஜிஸ்திரேட் முன்னிலையில் வழக்கு நடந்தது.

ராஜாஜி மீது இரண்டு குற்றங்கள் சுமத்தப்பட்டன; ஒரு குற்றத்திற்கு 200ரூபாய் அபராதம், அபராதம் செலுத்தத் தவறினால் மூன்று மாதம் சிறைவாசம்! மற்றொரு குற்றத்திற்கு ஆறு மாத சிறைவாசம்! ஆம்; மொத்தம் 9 மாதகால சிறைவாசத் தண்டனை.

சிரித்த முகத்துடன் அகில இந்திய பெருந்தலைவர் சிறைக்கு ஏகினர். ராஜாஜி கைதானதுமே வேதாரண்ய போர்களத்தில் அமைதி குலைந்தது. திட்டமிட்டு அமைதியைக் குலைக்கக்கூடிய வகையில் போலீசார் செயல் பட்டனர். புளிய மிளாறுகளால் தொண்டர்களை அடித்தனர், அடிபட்டவர்களிலே மதுரை ஏ. வைத்தியநாத அய்யர் முக்கியமானவராவார்.

காந்தியடிகள் 1930 மார்ச் 12ல் தொடங்கிய உப்பு சத்தியாக்கிரகப் போர், அப்போதிருந்த வைசிராய் லார்டு இர்வினுக்கும் காந்தியடிகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்திலே முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கத்துரை...

—1-ம் பக்கத் தொடர்

வும் கைது செய்து விளக்க மறியலில் வைத்துள்ளனர்.

திரு. தங்கத்துரைக்கு எதிரான வழக்கு எதிர்வரும் 5-5-78ல் திருகோணமலை மாவட்ட நீதிபதி முன் விசாரணைக்கு வருகிறது. தங்கத்துரையின் சார்பில் கூட்டணியின் பிரபல சட்டத்தரணிகளான திரு. மு. சிவசிதம்பரம், வி. என். நவரத்தினம், வி. யோகேஸ்வரன் உட்பட பலர் ஆஜராகிறார்கள்.

## நண்பர்கள் தேவையா



தோழர், தோழியர்களின் முகவரிகளும், கலாசார பேனா நட்புறவு விபரங்களுமடங்கிய தொகுப்புப் பிரதியை தபாலில் பெற்றுக் கொள்ள விண்ணப்பியுங்கள். சந்திரோதயம், சர்வதேச பேனா நண்பர்கள் தலைவர், பொறளை, கொழும்பு.

## அரசியலமைப்பு..

—1-ம் பக்கத் தொடர்

விரும்பினால் சிங்களத்திலும் படிக்கலாம்--சிங்களப்பிள்ளை விரும்பினால் தமிழிலும் படிக்கலாம் என்பதே வரவிருக்கும் புதிய திருத்தத்தின் வியாக்கியனமாகும்.

சிங்களம் மட்டுமே நாட்டின் ஒரே ஆட்சி மொழியாக இருப்பதனால், தமிழில் படிக்க வேண்டிய அவசியம் எதுவும் சிங்களப்பிள்ளைகளுக்கு ஏற்படாது; அதேசமயம், காலப்போக்கில் தமிழ்ப் பிள்ளைகள் ஆட்சி மொழியான சிங்களத்தையே போதனா மொழியாக ஏற்பார்கள் என்ற நம்பிக்கையுடனேயே இந்தப் பொறிக்கிடங்கு தோண்டப்பட்டிருப்பதாக கருதப்படுகிறது.

இரு மொழிகளும் சம அந்தஸ்துள்ள ஆட்சி மொழிகளாக இல்லாத நிலையில், விரும்பிய தேசிய மொழியை போதனாமொழியசக ஏற்கலாம் என்றுகூறுவது தமிழ் பிள்ளைகளிடம் சிங்களத்தை காலப்போக்கில் புகுத்தும் ஒருசூழ்ச்சியென்றே தமிழ்ப் பெற்றோர்கள் கருதுகின்றனர்.

## ஈழத் தமிழர்...

—5-ம் பக்கத் தொடர்

நாள் கூட்டம் 27-4-78 அன்று தியாகராயநகர் பேருந்து நிலையம் அருகிலுள்ள பெரியார் திடலில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மணவைத்தம்பி தலைமை வகித்தார். புலவர் எத்திராஜ் வரவேற்புரை நிகழ்த்தினர். நாகப்பன், ஆர். லிங்கசாமி திரைநீதிச் செல்வம், கி. செயராமன், செல்வி தன்மானம், தமிழ் மன்னன், அரு. கோபாலன், மண, நித்தலின்பன், செஞ்சி இராமச்சந்திரன் எம்.எல்,ஏ, பெருஞ்சித்திரனார் ஆகியோர் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

தந்தை செல்வா அவர்களின் நினைவு கூர்ந்து கழகப் பொருளாளர் சாதிக் அவர்கள் கடிதமொன்றைக் கூட்டத்தலைவருக்கு அனுப்பியிருந்தார்.

இலங்கைத் தமிழர் விடுதலை இயக்கம் இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது.


பாவியுங்கள்




றேயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றுமோர் தயாரிப்பு

றேயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றேயல் பேக்கிங்பவுடர்
றேயல் கஸ்டட் பவுடர்
றேயல் கோண் பிளவர்
றேயல் பிஸ் மக்ஸ்
றேயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இன்டஸ்றீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11



செல்லமகால் (கொட்டாஞ்சேனை) 10-வது வாரம்

எம். ஜி. ஆர். (இரு வேடங்களில்)
வாணிஸ்ரீ, நிர்மலா, பி. எஸ். வீரப்பா,
தேங்காய் ஸ்ரீனிவாசன் மற்றும் பலர் நடித்த—

ஊருக்கு உழைப்பவன்



இப்பொழுது

கெயிட்டி [கொட்டாஞ்சேனை]

முத்துராமன், அசோகன், தேங்காய் சீனிவாசன், விஜயகுமார், சந்திரகலா, ஸ்ரீவித்யா, மனோரமா, விஜயசந்திரிகா ஆகியோர் நடித்த—

காலங்களில் அவள் வசந்தம்

திரைக்கதை வசனம்:- பஞ்சு அருணாசலம்.

கிங்ஸ்லி (கொழும்பு) 9-வது வாரம்

ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா நடித்த

ஜானகி சபதம்

கெப்பிட்டல் (கொழும்பு) 3-வது வாரம்

எம் ஜி. ஆர்., ஜெயலலிதா விஜயகுமாரி நடித்த-

கணவன்

(புதிய கொப்பி)

8-வது வாரம்

வெலிங்டன் (யாழ்நகர்) பிளாஸா (வெள்ளவத்தை)

சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த—

கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ (யாழ்நகர்)

எம். ஜி. ஆர். அஞ்சலிதேவி நடித்த-

மர்மயோகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ. டண்டாறநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு மே 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. அச்சுப்பதிப்பு: ஐக்கியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்